**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

OS.NO. 573/2024 நாள்- 20.04.2026

**பி.வா.சா.1. ஜானகி**

**குறுக்கு விசாரணை வாதி தரப்பில்**

எதிர்வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலத்திற்கு நான்தான் விவரங்களை வழக்கறிஞருக்கு கூறினேன். நான் வேலை பார்க்கவில்லை என் கணவர் கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார். வாதியின் குடும்பத்தில் உள்ள நபர்களை எனக்கு தெரியாது. வாதியின் மகன் எங்கு வேலை பார்த்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. வாதி பெயருக்கு தாவா சொத்தை அடமானம் ஆவணம் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான் அந்த சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் வாதிக்கு 81 மாதங்கள் வட்டி கொடுத்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. நான் வாதிக்கு வட்டி கொடுக்காததால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ரசீது கொடுக்காததால் தாக்கல் செய்யவில்லை. வாதி வட்டி தொழில் செய்யவில்லை என்றும் நான் வாதிக்கு தெரிந்தவர் என்பதால் 06.06.2013 அன்று ரூ.3 லட்சம் கடன் கொடுத்தார் என்றும் அந்த கடனுக்காக தான் தாவா சொத்தை அடமானமாக வாதி பெயருக்கு எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் அசல் தொகையை 6 மாதத்தில் திருப்பி தருவதாக ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். அதன் பெயரில் அசல் தொகையை நாளது தேதி வரை வாதிக்கோ, நீதிமன்றத்திலோ வைப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். வாதியிடம் கடன் பெற்றுக் கொண்டுவிட்டு வட்டி செலுத்தாமல் வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் பொய்யான காரணங்களை குறிப்பிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், வாதி கோரும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்கு அசல் மற்றும் வட்டி தொகையை செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.